**அன்புள்ள வாடிக்கையாளருக்கு,**

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள நுகர்வோர் சாசனத்தின் கீழ் கோரப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், நாங்கள் வழங்குகின்ற உங்களுக்குத் தேவையான மற்றும் உங்களுக்குப் பொருத்தமான வங்கிக் கணக்குத் திட்டங்கள்/சேவைகளைத் தேர்ந்தெடுக்கும் போது உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களை [KFD] நாங்கள் தயாரித்துள்ளோம்.

முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணமானது [KFD], இலங்கை ரூபாய்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட கணக்குகள் மற்றும் கணக்குகளுடன் தொடர்புடைய விசேட பொதிகள் மற்றும் தனிப்பட்ட வங்கியியலுக்கான நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்குகள் ஆகியவை பற்றிய விரிவான அறிவை உங்களுக்கு வழங்கும்.

எவ்வாறாயினும், பின்வரும் KFD யில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களானது சட்டத்தில் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக திருத்தத்திற்கு உட்பட இடமுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ளவும். வங்கியின் அவ்வாறான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக KFD இல் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து வங்கி அது தொடர்பாக உங்களுக்கு அறிவிக்கும் என்பதைக் கவனிக்கவும்.

உங்களுக்கு மேற்கொண்டும் தகவல் தேவைப்பட்டால், கீழே குறிப்பிட்டுள்ளவாறு www.nationstrust.com இணையதளம் ஊடாக எங்களைத் தொடர்பு கொள்ளவும் அல்லது 011 4 711 411 என்ற 24 மணி நேர துரித அழைப்பு மையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள உங்களின் ஏதும் கணக்குகள் தொடர்பான ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பீ.எல்.சீ, இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற முகவரிக்கு முறைப்பாடு உள்ளடக்கப்பட்ட சுருக்கமான ஓர் அறிக்கையை எழுத்தில் அனுப்பி வைக்கவும் அல்லது [+94(0)114711411] எனும் தொலைபேசி இலக்கம் / [customerservice@nationstrust.com] எனும் மின்னஞ்சல் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும். நாங்கள் உங்களுக்கு விரைவில் பதிலளிக்கத் தயாராக உள்ளோம்.

| கணக்கு பற்றிய விபரங்கள் | வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் | கட்டண வகைகளும் ஏனைய வங்கி அறவீடுகளும் | ஒரு கணக்கைத் தொடங்குவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கியமான நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டம்** | | | | |
| இது வெளிநாட்டு நாணயத்தில் சம்பாதிக்கும் வாடிக்கையாளர்களுக்கு நடுத்தர காலவரை முதலீட்டிற்காக அதிக வட்டி விகிதத்தில் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை முதலீடு செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு திட்டமாகும். | • முதலீட்டு காலவரையில் 4.25% உத்தரவாதமளிக்கப்பட்ட வட்டி விகிதம்<br>• 3 மற்றும் 5 வருட முதலீட்டுக் காலம் | வங்கியின் நியம கட்டணங்கள் மற்றும் அறவீடுகளுக்கு உட்பட்டது. | நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கு திறப்பு படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, பின்வரும் ஆவணங்களுடன் ஏதேனும் ஒரு நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br>• தேசிய அடையாளஅட்டையின் (NIC) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி<br>• தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி மற்றும் வதிவிட முகவரி வேறுபடுமாக இருந்தால், முகவரியை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல ஆவண ஆதாரம் அவசியமாகும். | தகைமை பெறுவதற்கான வரையறைகள்:<br>• வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைப் பிரசைகள்<br>• இலங்கையில் இருந்து வெளிநாட்டில் குடியேறியவர்கள் (நிரந்தர குடியிருப்பாளர்கள்)<br>• அமெரிக்க டாலர்களில் சம்பாதிக்கும் இலங்கைப் பிரசைகள்<br>• இலங்கைக்கு வெளியே வசித்த/வசிக்கின்ற, இலங்கைப் பிரசைகள் அல்லாத, இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த (இலங்கையில் பிறந்த) வர்கள்<br>• • இலங்கை இரட்டைப் பிரசைகள்இந்நாட்டில் வசிக்காதவர்களுக்கு தொழில்முறை சேவைகளை வழங்குவதன் மூலம் வெளிநாட்டு நாணயத்தால் சம்பாதிக்கும் இலங்கையர்கள்<br>குறைந்தபட்ச நிலுவை பற்றிய<br>தேவை கிடையாது.<br>இருப்பினும்,வாடிக்கையாளருக்கு<br>முழு இலக்கு த் தொகையையும் அடைய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | முடிகின்ற<br><br>வகையில் நிலையான மாதாந்த<br><br>தவணைப் பணத்தை தொடர்ந்து<br><br>வைப்பிலிட வேண்டும்.<br><br>மாதாந்த தவணைப் பணத்தை அல்லது இலக்கு மதிப்பை, வங்கியினால் வழங்கப்பட்டுள்ள ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முதலீட்டுத் திட்டத்தின் கொடுப்பனவு அட்டவணையில் இருந்து வாடிக்கையாளருக்கு அவரின் விருப்புரிமையின் படி தீர்மானிக்க முடிவது இலக்குப் பெறுமதியையே அன்றி மாதாந்த தவணைப் பணத்தை அல்ல.<br><br>இலக்குப் பெறுமதி அரசாங்க வரிகளுக்கு உட்பட்டது (ஏற்புடையதாயின்).<br><br>• நேஷன்ஸ் சிறுவர் முதலீட்டுத் திட்டம் மற்றும் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கின் கீழ் வாடிக்கையாளருக்கு காப்புறுதிக் காப்பீடு வழங்கப்பட்டிருந்தால், வாடிக்கையாளரின் மரணத்தின் போது செலுத்தப்பட வேண்டிய அதிகபட்ச காப்பீட்டு தொகை ரூ. 2,000,000 ஆகும். |

- இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, அனைத்து பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் நேஷன்ஸ் வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்ட கணக்கிற்கு ஏற்புடையதாகும் என்பதுடன் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகளானது பொதுவான வியாபார நிபந்தனைகளின் கீழுள்ள https://www.nationstrust.com/images/pdf/general-business-conditions pdf இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- அவ்வப்போது திருத்தத்திற்கு உட்படும் கட்டண வகைகள் மற்றும் வங்கியின் ஏனைய கட்டணங்கள் ஆகியன வங்கியின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.
- இந்த வங்கியானது, ரூ. 1,100,000/- வரை வைப்பிலிடுகின்ற ஒரு வைப்பீட்டாளருக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற இலங்கை மத்திய வங்கியின் (CBSL) கீழ் இயங்குகின்ற இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் (SLDIS) ஓர் உறுப்பினராகும்.

- இந்த ஆவணத்தின் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ்ப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்பட்டால், இதன் ஆங்கிலப் பிரதியே செல்லுபடியானதாகக் கருதப்படும்.